தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## கீகோன்




## Gihon






கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்


மரம் 14 ஏப்ரல் 2014 கனி 5



R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Apr. 2014

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com


To

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார்;
சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.
சங்கீதம் 149:4


*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA


ரேடியோ நிகழ்ச்சியை கேட்கிறார்கள்



*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழ்



**Editor:**
**B.ARJUNAN**



**Associate Editor:**
**S.Reagan**



**Associate Editor:**
**A.Kanagaraj**


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 164

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி, அத்துடன் உங்களுக்கு வரும் எங்கள் மாத இதழ் முகவரியில் உள்ள உங்கள் **(Ref.No)** யும் எழுதி அனுப்பவும்.

1. சபையாரின் முகத்தைக் கண்டு, அவர்களுடைய விசுவாசத்தின் குறைகளை நிறைவாக்கும்பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக்கொண்டவன் யார்?
2. ஒருவன் என்னைப் பார்க்கவந்தால் வஞ்சனையாய்ப் பேசுகிறான்; அவன் தன் இருதயத்தில் அக்கிரமத்தைச் சேகரித்துக்கொண்டு, தெருவிலே போய், அதைத் தூற்றுகிறான் என்று சொல்லும் தேவதாசன் யார்?
3. சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற எவரும் எதற்குள்ளாக்கப்படுவார்கள்?
4. கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை எதில் எழுதிக்கொள் என திருமறை போதிக்கிறது?
5. தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரா?
6. அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல, அநேக வார்த்தைகளும் எப்படியிருக்கும்?
7. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும் என்பது உண்மையா?
8. திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிறவைகள் எவை?
9. பவுல், ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு என யாருக்கு எழுதினார்?
10. நீதியின் கிரியை எதுவும், நீதியின் பலன் எதுவுமாம்?

## கீகோன் Gihon

- ஏதேனிலிருந்து பிரிந்த நதிகளில் இது இரண்டாம் நதி - ஆதி.2:13
- எசேக்கியா ராஜா ஒரு குளத்தையும், கால்வாயையும் ஏற்படுத்தி இந்த நதித்தண்ணீரை நகரத்திற்குள்ளே வரப்பண்ணினான் - 2இரா.20:20
- எசேக்கியா கீயோன் ஆற்றிலே அணைகட்டினான் - 2நாளா.32:30
- மனாசே கீயோனுக்கு மேற்கே பள்ளத்தாக்கு தொடங்கி அலங்கத்தை கட்டினான் - 2நாளா.33:14
- சாலொமோனைத் தாவீது ராஜாவினுடைய கோவேறு கழுதையின் மேல் ஏற்றி, அவனை கீகோனுக்கு நடத்திக்கொண்டுபோனார்கள் - 1இரா.1:33,38



சிறுவர் பகுதி

# ரெபெக்காள்

## Rebekah

-K.Mohan

வேத பகுதி: ஆதியாகமம் 24:12-22



அருமையான சிறு பிள்ளைகளே நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இம்மாதம் ரெபெக்காள் என்ற பெண்ணை பற்றி பார்ப்போம். ஆபிரகாம் தனது மகனான ஈசாக்குக்கு பெண் கொள்ளும்படி தன் வேலைக்காரனை தன்னுடைய தேசத்திற்கு அனுப்புகின்றான். தன்னுடைய எஜமானுடைய மகனுக்கு பெண் கொள்ளும்படி பத்து ஒட்டகங்களுடன் நாகோருடைய ஊருக்கு வருகிறான். மிகப்பெரிய பொறுப்பை கொடுத்தான் எஜமானுக்கு நல்ல பெண்ணை தேர்ந்தெடுக்க விரும்புகிறான். அந்த ஊரின் தண்ணீர்த்துரவண்டையிலே நின்று மனதில் ஒரு முடிவு எடுக்கிறான். இங்கு தண்ணீர் எடுக்க வரும் பெண்களிடம் எனக்கு குடிக்க தண்ணீர் வேண்டும் என்பேன் யார் உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் தருகிறேன் என்று சொல்கிறாளோ, அப்பெண்ணையே நீர் தேர்ந்தெடுத்தீர் எனத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும் என்று வேண்டிக்கொண்டான்.

அப்பொழுது பெத்துவேலின் மகள் ரெபெக்காள் தண்ணீர் எடுக்க வந்தாள். அந்தப் பெண் மகா ரூபவதியும் புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள்; அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள். அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி; உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொன்னாள்.

அப்பொழுது அந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு @ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானை விட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம்பண்ணிவருகையில், கர்த்தர் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டுவந்தார் என்றான். இப்படியாக ரெபெக்காளின் திருமணம் கர்த்தருடைய பிள்ளையோடு நடந்தது.

**கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும் ஆதி.24:31**



திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 14 ஏப்ரல்-2014 கனி - 5

ஆசிரியருரை

# மந்தையின் ஆடுகள்

## The Sheep of the Flock



ஆண்டவர் இயேசு தம்முடைய ஜனங்களைப் பார்த்து "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்றார் (யோவா.10:11). நாமெல்லாரும் அவருடைய ஆடுகளாயிருக்கிறோம். அவர் நமக்காக ஜீவனைக் கொடுத்திருக்கிறார். அவர் நல்ல மேய்ப்பனாயிருக்கிறபடியால் தமது ஆடுகளைக் காப்பாற்றும் படியாக தமது ஜீவனையேகொடுத்திருக்கிறார். ஆகையால் மேய்ப்பனானவனுடைய சத்தத்தைக் கேட்டு ஆடுகள் மேய்ப்பன் பின்செல்வதைப்போல ஆண்டவருடைய சத்தத்தைக்கேட்கும் அவருடைய ஆடுகளாகிய நீங்கள் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுப்பீர்களா? "அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல் அவனை விட்டோடிப்போம்" (யோவா.10:5). நீங்கள் அவருடைய ஆடுகளாயிருந்தால் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுங்கள். அவர் உங்களை நேசிக்கும் ஒரு நல்ல மேய்ப்பனாயிருக்கிறார். "நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" என்றார் (யோவா.10:15). ஒரு நல்ல மேய்ப்பனை மந்தையின் ஆடுகள் நன்கு அறிந்திருக்கும். அதைப்போல அவருடைய மந்தையின் ஆடுகள் அவரை அறிந்து, அவருக்கும் அவருடைய வழிநடத்துதலுக்கும் கீழ்ப்படிகிறது. ஒரு நல்ல மேய்ப்பன் தன் ஜீவனை பெரிதாக எண்ணமாட்டான் தன்னுடைய மந்தையின் மீது தன்னுடைய முழுக்கவனத்தையும் செலுத்துவான். ஏனெனில் அவன் தன் மந்தையை நேசிக்கிறபடியால், ஆடுகளின் மீது அதிக கவனம் செலுத்துகிறான். நம்முடைய ஆண்டவர் இயேசுவும் தம்முடைய மந்தைக்காக ஜீவனையே கொடுத்திருக்கிறார். காணாமற்போன ஆடுகளாகிய உங்களை அவர் மிகவும் நேசிக்கிறார்.

"இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" என்றார் (யோவா.10:16). இந்த உலகத்தில் உள்ள ஆடுகள்

எல்லாம், அதாவது ஆத்துமாக்கள் எல்லாம் அவருடைய ஆடுகளாகும். அவைகளையெல்லாம் ஒரே மந்தையின் ஆடுகளாக கூட்டிச்சேர்க்கும்படியாக ஆண்டவர் இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே ஆண்டவர் அல்ல. உலகில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் அவர் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அதிபதியாகவும், இரட்சகராகவும் இருக்கிறார். அவராலே உலகம் இரட்சிக்கப்படும்படியாக உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டியாக அனுப்பப்பட்டார். ஆகையால் அவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து ஒரே மந்தையின் ஆடுகளாக அவருடைய மந்தையில் சேர்ந்துகொள்ளுங்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா காக்கப்படும்.

"மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளைவிட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்" (யோவா.10:12). ஆம், அன்பானவர்களே, இவ்வுலகத்திலே மேய்ப்பனாயிராதவர்களை நாம் அறிகிறோம். அவர்கள் கூலிக்காக வேலைசெய்கிறவர்களானபடியால் ஓநாய் வருவதைக் கண்டவுடன் மந்தையை விட்டு ஓடிப்போகிறார்கள். தன்னை ஓநாய் பீறிப்போட்டுவிடும் அல்லது கடித்து விடும் என்று பயந்துபோய் மந்தையை விட்டு தன் ஜீவன் தப்ப ஓடிப்போய்விடுகிறார்கள். ஏனெனில் "கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்" என்றார் (யோவா.10:13). ஆனால், நல்ல மேய்ப்பராகிய இயேசு அப்படிப்பட்டவரல்ல மந்தையைக் காக்கும்படியாக தன் உயிரை கொடுத்து மந்தையை காக்கிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும்போது; "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" என்கிறார் (1பேது.5:2-4). தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற மந்தையை கூலிக்காக மேய்க்கிற மேய்பர்களைப்போல மேய்க்காமல், மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். ஏனெனில் உக்கிராண உத்தியோகம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மந்தையை அடித்துச் சாப்பிடுகிற மேய்ப்பர்களைப் காண்கிறோம். ஓநாய் ஒருபுறம் மந்தையை அடித்துக்கொண்டிருக்கிறது, அதை மேய்க்கிற கூலியாள் ஒருபுறம் அதை அடித்துச்சாப்பிட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். இப்படி செய்வார்களானால் மந்தையின் பிரதான மேய்ப்பர் வரும்போது அவர்களுடைய நிலைமை என்னவாகும்? எனக்கு அன்பான சகோதரனே, உங்களிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள மந்தையின் மீது உங்களுடைய முழுகவனத்தைச் செலுத்துங்கள். மந்தைக்காக தமது ஜீவனைக் கொடுத்த பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவரும்போது அவருடைய மந்தையை சிறப்புடன் காத்துக்கொண்ட மேய்ப்பர்களாயிருங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கு வாடாத ஜீவகிரீடத்தைக் கொடுப்பார். தாவீது அரசனைக்குறித்து அறியாதவர்களே இருக்கமுடியாது அவன் ஆடுகளை



## தாங்கள் பாவி என்று ஒப்புக் கொண்டவர்களில் சிலர்

*-M.Rajamani*

| | | |
|---|---|---|
| 1. **பார்வோன்** | - | நான் பாவம் செய்தேன் (யாக்.9:27) |
| 2. **சவுல்** | - | நான் கர்த்தருடைய கட்டளையை மீறினதால் பாவஞ்செய்தேன் (1சாமு.15:24) |
| 3. **தாவீது** | - | நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன் |
| 4. **பிலேயாம்** | - | நான் பாவம் செய்தேன் (எண்.22:34 |
| 5. **நெகேமியா** | - | நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவம் செய்தோம் (நெகே.1:6) |
| 6. **சீமேயி** | - | நான் பாவஞ்செய்தேன் என்று அறிந்திருக்கிறேன் (2சாமு.19:20) |
| 7. **மீகா** | - | நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன் (மீகா.7:9) |
| 8. **ஆகான்** | - | நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன் (யோசு.7:20) |
| 9. **செக்கனியா** | - | நாங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம் (எஸ்.10:2) |
| 10. **பவுல்** | - | பாவிகளில் பிரதான பாவி நான் (1தீமோ.1:15,16) |
| 11. **யூதாஸ்** | - | குற்றமில்லாத இரத்தத்தை காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் (மத்.27:4) |
| 12. **பேதுரு** | - | ஆண்டவரே நான் பாவியான மனுஷன் (லூக்.5:8) |
| 13. **இளைமகன்** | - | தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் (லூக்.15:18,19) |
| 14. **ஆயக்காரன்** | - | தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் (லூக்.18:13) |

நீங்களும் ஒரு பாவியென ஒத்துக்கொள்ளுகிறீர்களா?
அப்படியானால் நீங்கள் செய்யவேண்டுவதென்ன?
மனந்திரும்புங்கள்.

**"நமக்குப் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் சத்தியம் நமக்குள் இராது"**
**1யோவான்1:8**

# உன்னிடத்தில் ஒரு குறை உண்டு

# One Thing You Lack

S.I.Reagan
Associate Editor



கிறிஸ்துவுக்குள் பிரியமான விசுவாச வாசகர்களே உங்கள் யாவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நம்மைப் பார்த்துக் கேட்கும் கேள்வியான ஒரு வசனத்தின் மூலம் உங்களை சிந்திக்கவும் சந்திக்கவும் வருகிறேன்.

இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் தங்களை அநேக காரியங்களில் மெச்சிக்கொள்ளுகிறார்கள். நான் கிறிஸ்துவின் ஒரு நல்ல விசுவாசி, நன்றாக ஜெபிப்பவன் மற்றும் என்னைப் போல் நல்ல ஊழியன் இல்லை என்றெல்லாம் தங்களை மேன்மைப்படுத்திக் கொள்ளுகிறோம். ஆனால் இயேசு கிறிஸ்து சொல்லும்போது; உன்னிடத்தில் ஒரு குறை உண்டு என்று சொல்லுகிறார். அது உண்மைதான். நம்மிடத்தில் ஒரு குறை மட்டுமல்ல அநேக குறைகள் உண்டு. அதை நாம் சரிப்படுத்திக் கொள்ளாமல் நம்மை நாமே மேன்மைப்படுத்திக்கொள்ளுகிறோம்.

பிரியமானவர்களே, இன்று அநேக விசுவாசிகளுக்கு தங்களுடைய ஆவிக்குரிய காரியங்களில் விசுவாச குறைவு உண்டு. இயேசு கிறிஸ்து கடுகு அளவு உண்மையான விசுவாசம் இருந்தால் போதும் என்கிறார். எனவே நாம் தேவனிடத்தில் உண்மையாக நடந்து நிறைவான விசுவாசத்தை பெறுவோம்.

**கர்த்தரை தேடுகிற காரியத்தில் நாம் குறைவாய் காணப்படுகிறோம்** (சங்.34:10). தானியேல் மூன்று வேளையும் தேவனுடைய சமூகத்தை நோக்கிப் பார்த்தான். ராஜாவின் கட்டளையையும் மீறி தான் தேவனைத் தேடுவதில் உறுதியாய் இருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டான். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது.

1தெச.5:17 வாசிக்கும்போது **ஜெபிப்பதில் அதிக குறைவுள்ளவர்களாய் இருக்கிறோம்.** இயேசு கிறிஸ்து சோர்ந்து போகாமல் இடைவிடாமல் ஜெபியுங்கள் என்று நமக்குச் சொன்னார். ஆனால் நாம் வாரம் ஒருமுறை எப்போதாவது என்று ஜெபித்துக்கொண்டு இருக்கிறோம். சங்கீதக்காரன் தாவீது கூறும்போது அந்தி சந்தி மத்தியான வேளைகளில் தேவனைத் தேட வேண்டும் என்று கூறுகிறார். எனவே நாம் ஜெபத்தில் அதிக உறுதியாய் தரித்திருந்து நம்முடைய குறைகளை ஒழிக்கவேண்டும்.

2கொ.8:1,2 **கர்த்தருக்கு கொடுக்கும் காரியத்தில் மிகவும் குறைவுள்ளவர்களாய் இருக்கிறோம்**. மக்கெதோனியா சபையார் கொடிய தரித்திரம் உடையவர்களாய் இருந்தும் தங்கள் பரிபூரணத்தால் சந்தோஷமாய் தேவனுடைய ஊழியங்களுக்குக் கொடுத்தார்கள். ஆனால் இன்றைய கிறிஸ்தவர்கள் ஊழியத்தையும், ஊழியத்தைச் செய்யும் ஊழியர்களையும் தாங்குவதில்லை. கர்த்தருக்குக் கொடுக்கிற விஷயத்தில் நாம் அப்.5:1-10ல் அனனியா சப்பிராளைப்போல நம் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொள்கிறோம். எனவே நாம் கர்த்தருக்குக் கொடுக்கும் காரியத்தில் ஏழை விதவை தாயைப்போல கொடுத்து கர்த்தரிடத்தில் நம் குறைகளை நிறைவாக்கிக்கொள்ளுவோம்.



மேய்த்துக்கொண்டிருந்தபோது நடந்த சம்பவத்தை அவர் சவுலுக்குச் சொன்னார்; "ஒரு விசை ஒரு சிங்கமும் ஒரு விசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன்" என்றார் (1சாமு.17:34,35). மந்தையின் ஆடுகளைப் பிடிக்க ஒரு சிங்கம் வந்தால் மேய்ப்பர்கள் என்ன செய்வார்கள் தலை தெரிக்க ஓடிவிடுவார்கள் அல்லவா? ஆனால் தாவீதோ அந்த மந்தையின் மீது கவனமாயிருந்தபடியால் தன் ஜீவன் போனாலும் பரவாயில்லை இந்த சிங்கத்தினிடமிருந்து என் ஆட்டை எப்படியாவது மீட்பேன் என்று அதைப் பின்தொடர்ந்தான். ஒரு சிங்கத்தைப் பின்தொடர்வது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. அதனுடைய வேகம் எப்படிப்பட்டதாக இருக்கும்? அதைத்தொடர்ந்துபோய் அந்த ஆட்டை அதன் வாய்க்கு தப்புவித்தான். சிங்கம் அவன் மேல் பாய்ந்தபோது அதின் தாடியைப் பிடித்து அதை அடித்துக் கொன்றுபோட்டான். தாடிவளர்ந்திருக்கிறது என்றால் அது மிகப்பெரிய சிங்கமாகத்தானிருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட சிங்கத்தைக் கொன்று அதன் வாய்க்கு தப்புவித்த தாவீது எப்படிப்பட்ட மேய்ப்பன் என்று பார்த்தீர்களா? இன்றைக்கு இப்படிப்பட்ட மேய்ப்பர்களைத்தான் கர்த்தர் எதிர்பார்க்கிறார். நீங்கள் உங்களை இப்படிப்பட்ட மேய்ப்பராக தேவனுடைய மந்தைக்கு ஒப்புக்கொடுப்பீர்களா? அப்படி ஒப்புக்கொடுத்து மந்தைக்காக வேலை செய்யும்போது பிரதான மேய்ப்பர் வெளிப்படுகையில் அவரிடத்தில் வாடாத ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். உங்களுடைய வேலை எப்படிப்பட்டதாக இருக்கிறது. கூலிக்காக மந்தையை மேய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அநேகர் கூலிக்காக வேலைசெய்யவே விரும்புகின்றனர். ஒருச்சாண் வயிற்றுக்காக வேலை செய்கிற மக்களாக இருக்கக்கூடாது. பொதுவாக எல்லோரும் சொல்லக்கூடிய வார்த்தை ஒருச்சாண் வயிற்றுக்காகத்தான் இந்தப்பாடுகள் என்பார்கள். நாம் அவ்விதமாக வேலை செய்கிற ஜனங்களாக இருக்கக்கூடாது. தேவனுடைய மந்தையை கட்டாயமாயல்ல நாம் மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்யவேண்டும். ஒரு சபையின் மூப்பனுடைய வேலை இப்படிப்பட்டதாயிருக்கிறது.

மேய்ப்பன் இருக்கும்வரை மந்தைக்குப் பாதுகாப்பு கிடைக்கும், மேய்ப்பனுக்கு ஒரு பிரச்சனை என்றால் மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் அல்லவா, அதைப்போல ஒரு சூழ்நிலை உருவானது. "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" என்று தம்முடைய சீஷர்களைப் பார்த்து கார்த்தர் சொன்னார் (மத்.26:31). வேதாகமத்தில் சொல்லப்பட்டபடியே இயேசுவை பிடித்து அடித்து கொன்றுபோட்டால் அவருடைய சீஷர்கள் எல்லாரும் ஓடிவிடுவார்கள் என்று அறிந்து அவரைப்பிடிக்க வகைதேடினார்கள். அந்தப்படியாக இயேசுவை பிடித்து வாரினால் அடித்து அவரைத் துன்பப்படுத்தி சிலுவையில் அறைந்து கொன்றார்கள். அன்று இரவே எல்லா சீஷர்களும் அவரை விட்டு ஓடிப்போனார்கள். மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று சொல்லப்பட்ட வேதவாக்கியத்தின்படி சிதறடிக்கப்பட்டார்கள். இயேசுவைப்

பிடித்தவுடன் அவருக்கு என்ன சம்பவிக்கும் என்பதை பார்க்கும்படியாக வந்த பேதுருவும் "அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்" என்று காண்கிறோம் (மத்.26:74). நீங்கள் அவருடைய மந்தையின் ஆடுகளாக இருந்து, அவரை மறுதலித்து வாழ்ந்துகொண்டிருக்கிற கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்களா? அல்லது அவருடைய மந்தைக்கு சாட்சிகளாக அவருடைய நாமத்தை அறிவிக்கும் சுவிசேஷகர்களாக இருக்கிறீர்களா? எனக்கு அன்பான தேவ ஜனமே, அவருடைய மந்தையின் ஆடுகளாக இருந்து அவருடைய ஆசீவாதங்களை பெற்றுக்கொள்ளும் தேவபிள்ளைகளாக இருக்கப் பிரயாசப்படுங்கள். நம் ஆண்டவர் "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்லவென்றார்" (மத்.15:24). ஒருவேளை அந்த காணாமற்போன இஸ்ரவேல் வீட்டாரைப்போல நீங்களும் காணாமற்போனவர்களாக இருக்கலாம். இப்பொழுதே தேவ சத்தம்கேட்டு அவருடைய மந்தையின் ஆடுகளாக இருக்கப் பிரயாசப்படுங்கள். மந்தைக்காக இயேசு மீண்டும் வரப்போகிறார். அவருடைய மந்தையின் ஆடுகளாக இருப்பீர்களென்றால் அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு என்றென்றும் அவரோடு வாழும் பாக்கியத்தை அடைவீர்கள். இல்லையேல் கைவிடப்படுவீர்கள்.

ஒருவேளை நீங்கள் நினைக்கலாம் நான் அவருடைய சபைக்கு செல்கிறேன், நான் ஒரு கிறிஸ்தவராக வாழ்ந்துகொண்டிருக்கிறேன் அவர் என்னைக் கைவிடுவாரா? என்று கேட்கலாம்; "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்கிறார் (மத்.7:21). தேவனுடைய சித்தத்தின்படி செய்யாதவர்கள் தேவனுடைய மக்கள் அல்ல, யாரெல்லாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி ஜீவிக்கிறார்களோ அவர்களே தேவனுடைய ஜனங்களாகவும், அவருடைய மந்தையின் ஆடுகளாகவும் இருக்கிறார்கள். நீங்கள் அவருடைய ஆடுகளாக இல்லாதபட்சத்தில் உங்களுக்கு அநேக ஆபத்துக்கள் காத்திருக்கிறது. அதேவேளையில் மந்தையோடு மந்தையாக இருப்பீர்களேயானால் உங்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இருக்கும். அதுவும் பிரதான மேய்ப்பனாகிய இயேசுவிடம் நீங்கள் திருப்பப்படும்போது உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடையும் பாக்கியத்தைப் பெறுவீர்கள். இந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள கால தாமதம் செய்யாதீர்கள். இன்றே அவருடைய சத்தம்கேட்டு அவருடைய மந்தையின் ஆடுகளாயிருக்கப் பிரயாசப்படுங்கள். அப்பொழுது அளவில்லா ஆசீர்வாதம் பெறுவீர்கள்.

**சிதறிப்போனவர்கள் அப்படியே போய்விட்டார்களா?**

மேய்ப்பனை வெட்டுவேன் மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று சொல்லப்பட்டபடி அவர்கள் போனாலும் அவர்களை கர்த்தர் மீண்டும் மந்தையில் சேர்க்கும்படியாக அவர்களை சந்தித்து என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று கர்த்தர் பேதுருவிடம் கேட்கும்போது அப்படியே அவன் ஒப்புக்கொடுத்து, முதல் சுவிசேஷகனாக தன்னை ஆயத்தப்படுத்தினான். நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக்



2. பவுல் சபையைத் துன்பப்படுத்தினபோது கிறிஸ்துவையும் துன்பப்படுத்தினார்.

3. நம்முடைய கிறிஸ்தவ சகோதர சகோதரிகளை நாம் தவறாக நடத்தும்போது, நாம் கிறிஸ்துவைத் தவறாக நடத்துகிறோம்.

4. சவுலின் மனதில் வெள்ளமெனத் தோன்றிய எண்ணங்களை கற்பனை செய்துபாருங்கள்.

a. இயேசு மரித்துவிட்டார் என்று எண்ணினேன். அவரைப் பின்பற்றுகிறவர்கள் அவர் உயிரோடிருக்கிறார் என்றார்கள் அவர்கள் சொன்னது சரியே.

b. அவர் பரிசுத்தமானவர் தெய்வீகமானவர் என்றார்கள். ஆம், அவர் அப்படியே இருந்தார்.

C. அவர்தான் கிறிஸ்து என்று அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும்.

D. அவர்கள் சரியாகச் சொன்னார்கள். நான் தவறு செய்துவிட்டேன். மரணத்துக்கேதுவான தவறு செய்து விட்டேன்.

C. எல்லா மதங்களும் சரியானதல்ல என்று நாம் படிக்கிறோம்.

1. சவுல் மிகவும் பக்தியும் அர்ப்பணிப்புமுள்ள யூதன்.

2. அவருக்கு மிகப்பெரிய மத சம்பந்தமான பாரம்பரியமிருந்தது.

3. சபையை துன்பப்படுத்திய போதும் கூட அவர் கடவுளுக்கு சேவை செய்வதாகவே நினைத்தார்.

4. மோசேயின் பிரமாணத்தின்படி அவர் குற்றமற்றவராக இருந்தார். நியாயப்பிரமாணத்துக்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன் (பிலி.3:6)

5. அவன் இயேசுவை ஒரு வஞ்சகர் என்று உறுதியாக தீர்மானித்திருந்தான்.

6. சவுலுக்கு நல் மனச்சாட்சி இருந்தது... இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான் (அப்.23:1).


7. யோவான் 8:22-ல் இயேசு சொன்னார்: சத்தியமே நம்மை விடுதலையாக்கும். நம்முடைய மனச்சாட்சியோ அல்லது நேர்மையோ அல்ல. சவுலின் மனச்சாட்சியைப் போலவே நம்முடைய மனச்சாட்சியும் தவறாக எண்ணிக்கொண்டிருக்கலாம்.

8. இருப்பினும் பவுல் தன்னைப் பாவி என்று உணர்ந்து கிறிஸ்துவிடம் மனந்திரும்பினார். ஏன்? இன்றுள்ள நவீன கால சிந்தனையின்படி இந்த நிலையிலேயே சவுல் இரட்சிக்கப்பட்டு விட்டார். அதே கடவுளை அவர் சேவிக்கிறார்.

a. ஆதித் திருச்சபை சிநேகமாக இருந்தபடியால் பவுல் இயேசுவை பின்பற்றத் துவங்கவில்லை.

B. யூத மார்க்கத்தினுடைய கடுமையான சட்டதிட்டங்களால் ஏற்பட்ட அதிருப்தியால் பவுல் மனமாற்றமடையவில்லை.

C. தன்னுடைய பாவங்களிலிருந்து கிறிஸ்து ஒருவரே இரட்சிக்க முடியும் என்பதை நன்கு அறிந்திருந்தபடியால் மாறினார். இன்றைக்கும் அது உண்மையாயிருக்கிறது (யோவான் 14:6).



## பாடம் -5 சவுலின் மனமாற்றம்

*- Jerry Bates*

-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை

**A.** 1. வேதாகமத்தில் தர்சுபட்டணத்து சவுலின் மனமாற்றத்தை விட ஆச்சரியப்பட வைப்பவை வெகு சில மட்டுமே.

2. முதல் நூற்றாண்டில் மிகவும் செல்வாக்குள்ள கிறிஸ்தவனாக சவுல் மாறினார்.

3. ஏறக்குறைய புதிய ஏற்பாட்டில் பாதியை எழுதினார்.

4. புற ஜாதியாருக்கு அவர் அப்போஸ்தலரானார்.

5. இருப்பினும் பவுல் தன்னை பாவிகளில் பிரதான பாவி என்றார்.

**1. சவுலின் பின்னணி:**

**A.** சவுலைப் பற்றி முதலாவது நாம் கேள்விப்படும்போது அவர் சபையைத் துன்பப் படுத்தினவராயிருந்தார்.

1. ஸ்தேவான் என்றொரு மனிதன் தைரியத்தோடும் தீர்மானத்தோடும் பிரசங்கித்துக் கொண்டிருந்தார் (அப்.7:51-53).

2. அவருடைய பிரசங்கம் யூதர்களின் இருதயத்தைக் குத்தினது (அப்.7:54).

3. கோபங்கொண்ட கூட்டத்தார் கவனிப்பதை விட்டுவிட்டு, ஒரே மனதாய் ஸ்தேவானை நோக்கி விரைந்து அவனை நகரத்துக்கு அப்புறப்படுத்தி கல்லெறிந்தார்கள்.

4. அதற்கு சாட்சிக்காரர், தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி சவுல் என்னப்பட்ட ஒருவாலிபனுடைய பாதத்தருகே வைத்தார்கள் (அப்.7:58).

**B.** தொடர்ந்து சவுல் சபையை துன்பப் படுத்திக்கொண்டிருந்தான்.

1. ஸ்தேவானுடைய மரணத்துக்கு சவுல் சம்மதித்தான் (அப்.8:1).

2. சவுல் சபையில் மிகுந்த குழப்பங்களை உண்டு பண்ணினான் (அப்.8:3).

3. அநேக பரிசுத்தவான்கள் சவுலைப் பற்றி பயப்பட்டார்கள், அவர்களில் அனனியாவும் ஒருவன் (அப்.9:13,14).

4. பின்னாளில் பவுல் தான் சபையை அளவுக்கதிகமாய் துன்பப்படுத்தி வீணாக்கியதை சொல்கிறார் (கலா.1:13).

**ஒரு எதிர்பாராத எதிர்ப்பு தொடர்ந்தது**

**A.** கிறிஸ்தவர்களை சிறையில் போடும்படி சவுல் தமஸ்குவுக்குப் போய்க் கொண்டிருந்தார் (எருசலேமிலிருந்து 225 கி.மீ தூரம்)

1. சடுதியிலே சூரிய ஒளியைவிட பிரகாசமான ஒளி அவரைச் சுற்றி பிரகாசித்தது. அந்த கண் கூசும் வெளிச்சம் சற்றும் சந்தேகத்துக்கு இடமளிக்கவில்லை. இது பரத்திலிருந்து வருகிற தரிசனம்தான்.

2. பவுல் ஒரு மனிதனைக் கண்டார். ஆனால் அது யாரென்று தெரியவில்லை (அப்.9:5).

**B.** இயேசு சொன்னார் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே.

1. சிலர் கிறிஸ்துவை நேசிப்பதாகச் சொல்கிறார்கள், இருப்பினும் சபையில் எதுவும் செய்ய விரும்புவதில்லை.



கல்லின்மீது என் சபையைக் கட்டுவேன் என்று சொன்னார். முதன் முதலில் எருசலேமில் ஆண்டவருடைய சபை ஆரம்பிக்கப்பட்டது. பேதுருவின் பிரசங்கத் தைக்கேட்ட 3000பேர் உடனே ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட்டார்கள். சுவிசேஷம் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே அறிவிக்கப்பட்டது. "சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" என்று அப்.8:4-ல் வாசிக்கிறோம்.

எத்தனையோ மார்க்கங்கள் தோன்றி இந்த உலகத்தில் அழிந்துபோய் விட்டது, இன்னும் சில அழிந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஆண்டவர் இயேசுவினால் தோற்றுவிக்கப்பட்ட ஜீவனுள்ள மார்க்கம் இன்றும் ஜீவனோடு இருக்கிறது. அவரால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள், கர்த்தருடைய கடைசி கட்டளையின்படி உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். அதில் ஒருவராகிய தோமா இந்தியாவுக்கு வந்து சுவிசேஷம் அறிவித்தார் என்று நாம் வரலாற்றுப்பூர்வமாக அறிகின்றோம். சிதறடிக்கப்பட்டவர்கள் அப்படியே சிதறடிக்கப்பட்டவர்களாக போய்விடவில்லை. மாறாக சுவிசேஷ வசனத்தை பிரசங்கிக்கிறவர்களாக அதற்கு சாட்சியாக எங்கும் சுற்றித்திரிந்தனர். அன்பான தேவஜனமே, நீ சுவிசேஷத்தை அறிவித்து கர்த்தருடைய மந்தையில் கணக்கில்லா ஆத்துமாக்களை சேர்க்கப்பிரயாசப்படு, அப்பொழுது கணக்கில்லா ஆசீர்வாதங்களை கர்த்தருடைய சமுகத்தில் நீ பெற்றுக்கொள்வாய். கர்த்தர் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்கும்படியாக உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# அத்தேனே – ATHENS

இது கிரேக்க தேசத்திலுள்ள விசேஷமான பட்டணம். இது துறைமுகத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் ஒரு சமவெளியில் கட்டப்பட்டிருந்தது. இந்த வெளியில் உயர்ந்த மேடைகள் இருந்தன. அவைகளில் ஒன்றின்மேல் அத்தேனே தேவிக்கு (விக்கிரகம்) ஒரு கோவில் இருந்தது. இதற்கு அடுத்த இன்னொரு குன்றின்மேல் “மார்ஸ்மேடை” என்ற ஒரு இடமிருந்தது. இவ்விடத்திலே அவர்களுடைய சங்கம் கூடுவது வழக்கம். பிரசங்கம் பண்ணுகிறவர்களுக்கும் இந்த இடம் கொடுக்கப்பட்டது பவுலும் அப்படியே இவ்விடத்தில் பிரசங்கஞ்செய்தான். அப்17:15-34.

அத்தேனே பட்டணத்தில் நாகரீகத்திலும், படிப்பிலும் பேர் பெற்ற கலாசாலைகளும் இருந்தன. இதினிமித்தம் படிப்பாளிகள் வேறு தேசங்களிலுமிருந்து அங்கே போவது வழக்கம்.

*S.Rajaprasath*

# பரலோகம் உண்டென நாம் ஏன் நம்புகிறோம்

## Why We Believe In Heaven

*J.C.Choate*

நான் பரலோகத்தைப் பற்றி பேசும்போது, நான் வானத்தையோ, மேகங்களையோ அல்லது சுற்றுச் சூழலைப் பற்றியோ பேசவில்லை. நான் முழு வான்வெளியைக் குறித்தும்கூட பேசிக் கொண்டிருக்கவில்லை. சில நேரங்களில் நாம் இவைகளை பரலோகத்திற்கு ஒப்பிடுகின்றோம், ஆனால் நான் நினைக்கின்ற பரலோகமானது தேவன் வாசஞ்செய்கின்ற இடமாகும். பக்தியுள்ள ஆத்துமாக்கள் நித்தியத்தைக் கழிக்கும் ஒரு அழகான இடம், நீதிமான்களின் இருப்பிடம். பரலோகமானது தேவனுடைய வார்த்தையில் புதிய எருசலேமாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வேதவாக்கியங்கள் பரலோகத்தைப் பற்றிபேசுகிறது. நீதியினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவானவர், “சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே” (மத்.5:12) என்றார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக” (லூக்.11:2). அவர் அவர்களுக்கு, “பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்” (மத்.6:20,21) என்று அறிவுறுத்தினார். கிறிஸ்து தம்மை தேவனுடைய குமாரனென்று அப்போஸ்தலர்கள் அறிக்கையிட்ட பிறகு அவர்களிடம், “பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்” (மத்.16:19). கர்த்தர் தாம் போகும் சகலபட்டணங்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே அனுப்பிய எழுபது பேரை நோக்கி: “இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்” (லூக்.10:19,20).

தொடர்ந்து அவர் மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமென அறிவுறுத்தப்படுகிறோம் (லூக்.15:7). இது கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கினவர் எனவெளிப்படுத்துகிறது (யோவா.3:13). இயேசு சீஷர்களுக்கு வானத்திலிருந்து வந்த அப்பத்தைப் பிதாவானவர்



பெண்கள் பகுதி

# ஞான இருதயமுள்ள ஸ்திரீகள்

## The Women that were wise hearted

*- Glory Arjunan*

ஞான இருதயமுள்ள ஸ்திரீகளின் வரிசையில் அபிகாயிலும் ஒருத்தி. தீவிரமாகக்



கவனிக்க வேண்டிய அவசரக் காரியத்தைக் கவனித்து தன் குடும்பத்தாரைக் காப்பாற்றுகிறாள் (Meeting an emergency and saving her household). ஞான இருதயத்தைக் கொண்டிருந்த இவள் வரவிருக்கும் பொல்லாப்பிற்கு தன் கணவரையும் தன் வீட்டார் அனைவரையும் தப்புவிக்கிறாள். அபிகாயிலின் கணவன் நாபால். இவன் பேலியாளின் மகனாயிருந்தான். அதாவது யோக்கிதையற்ற மகனாயிருந்தான். 2சாமு.23:6-ல் “பேலியாளின் மக்கள் அனைவருமோ, கையினால் பிடிக்கப்படக்கூடாததாய் எறிந்துபோடப்படவேண்டிய முள்ளுக்குச் சமானமானவர்கள்” என்று வாசிக்கிறோம். இப்பேர்பட்ட நபர்களை நெருங்கினால் முள்ளைப் போல குத்தி பதம் பார்க்கக் கூடியவர்களாயிருப்பார்கள். இந்த நாபால் பேலியாளின் மகன் என அழைக்கப்பட காரணமென்ன? 1சாமு.25:14-17 வரை உள்ள வசனங்களில் இவனைக் குறித்து எழுதப்பட்டுள்ளது.

“அப்பொழுது வேலைக்காரரில் ஒருவன் நாபாலுடைய மனைவியாகிய அபிகாயிலை நோக்கி: இதோ, நம்முடைய எஜமானுடைய சுகசெய்தி விசாரிக்கத் தாவீது வனாந்தரத்திலிருந்து ஆட்களை ஆனுப்பினான்; அவர்கள் பேரில் அவர் சீறினார். அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப்படுத்தினதுமில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற்போனதுமில்லை. நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள். இப்போதும் நீர் செய்யவேண்டியதைக் கவனித்துப்பாரும்; நம்முடைய எஜமான்மேலும் நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது; இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக்கிறார் என்றான்”. பாருங்கள் தன்னிடத்தில் சுகசெய்தியை விசாரிக்க வந்த மனுஷரிடம் சீறினார் என வாசிக்கிறோம். அதுமாத்திரமல்ல, அந்த மனுஷர் இந்த நாபாலின் வேலைக்காரர்களுக்கு உபகாரிகளாகவும், மதிலாகவுமிருந்திருக்கிறார்கள். எனவே முள்ளுக்குச் சமானமாயிருந்த இந்த நாபாலுக்கு எதிராக தாவீதும் அவன் கூட்டதாரும் புறப்பட்டனர். இதை அறிந்த நபாலின் வேலைக்காரன் நாபாலின் மனைவி அபிகாயிலிடம் ‘நம் எஜமான் மேலும்.... பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது’ என்றான். இதைக் கேட்ட அபிகாயில் தன் கணவன் மேலும் தன்னுடைய குடும்பத்தார் மேலும் வரவிருந்த பொல்லாப்பை தடுக்கும் பொருட்டு அவசரமாய் புறப்பட்டு தாவீதினிடத்தில் ஞானமாய் பேசி தன் குடும்பத்தார் மேல் வரவிருந்த பொல்லப்பை தடுத்து நிறுத்தினாள். இது இவளுடைய ஞானமல்லவா!

அன்பு சகோதரிகளே, “புத்தியுள்ள (ஞானமுள்ள) ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்” (நீதி.14:1) என நாம் அறிவோம். நீங்கள் புத்தியுள்ள ஸ்திரீயாக இருந்து உங்களுடைய குடும்பங்களைக் கட்டுங்கள். அதற்கு வேண்டிய ஞானத்தை கர்த்தர் கொடுப்பாராக!

நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய பாவங்களை நீக்கும் படிக்கு இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தில் அவைகளை சிலுவையின் மேல் சுமந்தார். "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று..." ரோம.6:6 விளக்குகிறது.

எப்பொழுது மற்றும் எவ்வழியில் நாம் பாவத்திற்கு மரித்து தேவனுக்கு முன்பாக புது சிருஷ்டியாக மாறி, அவருடைய குமாரனின் நீதிக்குள்ளாக உடுத்து விக்கப்படுகிறோம்? "... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத் தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்"(ரோம.6:3,4).

நீங்கள் உங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்க அல்லது இரட்சிப்பிற்காக தேவன் எதிர்பார்க்கிறதைப் பற்றிய உங்கள் அறியாமையை சார்ந்திருக்க தீர்மானித்திருப்பீர்களானால், **திரும்பிச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வு செய்யுங்கள்**. இழந்த நிலையில் தொடர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாதீர்கள்.

**கொடுமையுள்ளவன்மேல் பொறாமை கொள்ளாதே**
**அவனுடைய வழிகளில் ஒன்றையும் தெரிந்துகொள்ளாதே - நீதி.3:31**

## நடப்புச் செய்திகள்

- உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு, இம்மாதம், 23-ல் இருந்து, ஜூன் 1 வரை கோடை விடுமுறை, ஜூன் 2-ம் தேதி மீண்டும் பள்ளிகள் திறக்கப்படும்.
- ஐ.நா ஓட்டெடுப்பை இந்தியா புறக்கணித்ததால், இலங்கை சிறைகளில் வாடிய தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுவிக்க அதிபர் ராஜபக்சே அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.
- நம் நாட்டின் நீளமான ரெயில் பெங்களூர்-தர்மாவரம் செல்லும் சரக்கு ரெயில்தான். இதன் நீளம் 1,222 மீட்டர். சுமார் 1 1/4 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த ரெயில் தினமும் இயக்கப்படுகிறது.
- தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் தினமான இம்மாதம் 24-ம் தேதி பொது விடுமுறை விடப்படும் என்று தலைமை செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் உத்தரவிட்டுள்ளார்.
- தோனியின் வருமான வரி ரூ. 20 கோடி. பீகார் மற்றும் ஜார்கண்ட் பகுதியிலேயே, தனிநபர் ஒருவர் செலுத்தும் அதிகபட்ச வருமானவரி இதுதான்.



கொடுக்கிறார் எனக் கூறுகிறார் (யோவா.6:32). பவுல் கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்தியவீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" (2கொரி.5:1) என்றார். மீண்டும் கலாத்திய சபை கிறிஸ்தவர்களுக்கு, "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலாத்.1:8) என்றான். சில நாளில் தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையைச் செலுத்தும்படிக்கும் கர்த்தர் வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு உறுதிப்படுத்தினார் (2தெச.1:7-9). பேதுரு, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார் உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1பேது.1:3,4) என்றான். யோவான், பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது" (வெளி.21:1,2) என்றான். பரலோகம், தேவனுடைய நித்திய வாசஸ்தலம் மேலும் ஆத்துமாவின் வீடு என்பனவற்றைப் பற்றிய வேத பகுதிகள் சிலவற்றை தொடர்ச்சியாக நாம் காணலாம்.

பரலோகத்திற்கு யார் செல்லுவார்கள்? இந்த நாளைக்குறித்து இயேசு ஜனங்களுக்கு, "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:3) என்றார். இதன் அர்த்தமானது, குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகள் அல்லது பொறுப்புள்ள வயதை அடையாதவர்கள், மேலும் அவர்கள் நல்லது கெட்டதை அறியாதிருக்கிறபடியினால், தங்களுடைய செயல்களுக்கு உத்திரவாதிகளாகயிராதபடியினால், அவர்கள் மரிக்கும் போது பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று அர்த்தமாகிறது. கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை பரலோகத்தில் காக்கப்பட்டிருக்கும். பவுல், "அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்" (1கொரி.15:24) என்றான். சரீரம் அல்லது சபைக்குக் கிறிஸ்து இரட்சகராயிருக்கிறாரென எபேசியர் 5:23-ல் வாசிக்கின்றோம் (கொலே.1;18;

அப்.20:28). இது “கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் ...”கர்த்தர் நிறுத்திக்கொள்வார் எனச் சுட்டிக் காண்பிக்கக் கூடியதாக இருக்கிறது (எபே.5:27). கர்த்தர் எவ்வாறு தம்முடைய தூதர்களை அனுப்பி தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அழிக்கும்படிக்கு அக்கினிச் சூளையிலே போடுவார்கள் என்பதை மத்தேயு13:41-ல் வாசிக்கிறோம். தவிர சபையானது பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ள போகுமானால், அதன் பொருள் நாம் நித்திய ரட்சிப்பை பெற்றிருக்க கண்டிப்பாக சபையில் இருக்கவேண்டும். வேதவாக்கியமும்கூட உண்மையுள்ளவர்கள் அல்லது கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் பரலோகத்திற்குச் செல்லுவார்கள் எனக்கூறுகிறது. கிறிஸ்து, “.....நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்” (வெளி.2:10) என்றார். யாக்கோபு, “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்” (யாக்.1:12) என்றான். யோவான், ‘ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்” (வெளி.22:14) என்று எழுதினார்.

அதே சமயம் இது மற்றவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்களென சுட்டிக்காண்பிக்கிறதாக இருக்கிறது. இவர்களோடு சாத்தானும் அவனுடைய தூதர்களும், (மத்.25:41), அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்களும் (மத்.13:41) மேலும் துன்மார்க்கரும் (1கொரி.6:9,10; கலா.5:19-21) சேர்க்கப்படுவார்கள். வெளிப்படுத்தல் 21:8-ல் நாம், “பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக் காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்” என வாசிக்கிறோம். மாயக்காரரும் பரலோகத்திற்குச் செல்லமாட்டார்களென நினைவில் கொள்ளுங்கள் (மத்.24:51) மேலும் கடைசியாக, மோசம்போகிறவர்களும் சமயப் பிழையில் நிலைத்திருக்கிறவர்கள் கேடுள்ளவர்களாவார்கள் (2தீமோ.3:13; ரோம.16:17,18).

யார் பரலோகத்தில் இருக்கிறார்கள்? அங்கே தேவன் இருக்கிறார். ஜீவனுள்ள தேவன் வாசஞ்செய்கிற நகரமென பரலோகம் தாமே வர்ணிக்கப்பட்டுள்ளது (எபே.12:22). அங்கே இயேசு கிறிஸ்து இருக்கிறார் (அப்.2:32,33). அங்கே தேவதூதர்கள் இருக்கிறார்கள் (2தெச.1:7-9).

பரலோகம் எதைப் போலிருக்கும்? யோவான் பரலோகத்தைக் குறித்து, “பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.



நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்”(யோவா.12:48) என எச்சரித்தார். **நாம் அவருடைய எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: அறியாமை நம்மை இரட்சிக்காது!**

ஆனால் நாம் நம்முடைய சுயநீதி ஜீவியத்தினால் இரட்சிப்படைய முடியாது ரோம.3:10,23, “அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை,.....எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி”,எனக் கூறுகிறது. ஏசாயா59:1,2-ல், “இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது**” என வாசிக்கிறோம்.

மனிதன் முதிர்ச்சியடைந்து பாவத்தைத் தெரிந்துகொள்ளும் போது, அந்தப் பாவங்கள் அவனுக்கும் தேவனுக்குமிடையே ஒரு சுவர் போலாகி பிரிவினையை உண்டாக்குகிறது. நாம் நம்மை பாவமற்றவர்களாக மாற்றமுடியாது; ஆனபடியினால் நாம் நம்மை மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டுவர முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் பயிற்சிக்கிற “நற்குணம்” எதுவாயினும் நம்முடைய பாவத்தினால் கறைப்படுத்தப்பட்டதாய் நம்முடைய வாழ்வில் எப்போதும் தோற்றமளிக்கிறது.

**இதற்குப் பரிகாரம் என்ன?**

நாம் 1பேது.2:21-25-ல்“இதற்காக நீங்கள் அழைக்கப் பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், **கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு**, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப் போனார். ‘அவர் பாவஞ்செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப் படவுமில்லை’(ஏசா.53:9). அவர் வையைப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, **அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** (ஏசா.53:5). சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப் பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்” என வாசிக்கிறோம்.

மேலும் 2கொரி.5:21, “**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு,** பாவம் அறியாத அவரை **நமக்காகப் பாவமாக்கினார்**” என விளக்குகிறது. ஆனால் நாம் பாவிகளாகயிருப்பதினால், நாம் மீண்டும் ஒரு முறைகூட வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படிக்கும் நம்முடைய பாவங்கள் நீங்கி அவருடைய நீதிக்குள்ளாக நாம் இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படிக்கும் நாம் ஒரு இரட்சகரைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும்.

பெண்கள் பகுதி

# நல்லவராய் இருப்பதே நன்று

## Being "Good" is Good Enough *-Betty*



எல்லா சமயமும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையாக இல்லையா? ஒரு மனிதன் **நேர்மையாகவும் உண்மையாகவும், ஒரு சிறந்த அண்டைவீட்டானாகவும், ஒரு சிறந்த மனிதனாகவுமிருக்க** முயற்சிக் கிறவனாகவும் இருந்தாலே தேவன் அவனை ஏற்றுக்கொள்ளுவார் என அனைத்து சமயங்களும் போதிக்க வில்லையா?

அதிகமாக ஜனங்கள் தனிப்பட்ட விதத்தில் உள்ள நற்குணமே தேவனை திருப்தி செய்ய போதுமானது என நம்புவதையே விரும்புகின்றனர். மேலும் **அவர்கள் இது குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதை கண்டுகொள்ளும்படி அவருடைய வார்த்தையை படிக்கின்றதை தவிர்ப்பதையே தெரிந்து கொள்ளுகின்றனர், ஆனால் மாறாக, தங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்கு தங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்கின்றார்கள்.** எப்படியோ, தேவன் அவர்களிடத்தில் அதிகமானதை எதிர்பார்த்தாலும் கூட, அவர் அதிகம் எதிர்பார்க்கிறார், அவருக்குக் கீழ்ப்படியும்படிக்கு தங்களுடைய வீழ்ந்துபோன நிலையை மன்னிப்பார் என்று அவர்கள் **அறியாதவர்களாகவே** இருக்கின்றனர். பிடிவாதமான அறிவீனம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா? தனிப்பட்ட விதத்திலான நற்குணம் போதுமானதா? "உண்மையாகவே, இந்த அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்;** மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே ...."(அப்.17:30,31).

இந்த வசனம், நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் நம்மைக் கேட்டுக் கொண்டதைக் குறித்த நம்முடைய அறியாமைக்காக நம்மை மன்னிக்க மாட்டார் என தெளிவாகக் கூறுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் கண்டிப்பாக **அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்**. அவர் கட்டளையிட்டிருப்பதை அவருடைய வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கற்பிக்கட்டும்.

நாம் அறியாதிருப்போமானால், நாம் அவருக்குக் கீழ்ப்படியமுடியாது. ஆகவே நாம் கற்றுக் கொள்ளுகிறதான இந்த காரியம் ஒரு கட்டளையாகும். இதை இயேசு, "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை



யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்: அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பியது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்; இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன், தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவதண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" (வெளி.21:1-7) என்று எழுதினார்.

தொடர்ந்து வாசிக்கையில், யோவான், "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். பின்பு, அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும், சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்" (வெளி.222:1-7) என எழுதுகிறான்.

நிச்சயமாக, நாம் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகம் முழுவதையும் வாசிக்கையில், பரலோகம் பொன்னாலாகிய நகரத்தின் வீதிகளையும் சகலவித

இரத்தினங்களினாலும் மற்றும் வச்சிரக்கல்லாலும் ஆன அஸ்திபாரங்களையுடைய நகரத்தின் மதில்களையும் கொண்டிருக்குமென ஆவிக்குள்ளான யோவான் கூறுவதை நாம் அறிந்திருக்கிறோம். யோவான் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தை இவ்வாறான வசனங்களில் ஆரம்பித்தார்: “சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது” (வெளி.1:1-3). ஆனபடியினால், மனுஷனாகிய யோவான், இதற்குமுன் ஒரு மனுஷனும் ஒருபோதும் கண்டிராதவைகளைக் காண சக்தியுடையவனாயிருந்தான். பரலோகத்தைக் குறித்தும் அதன் சகல மகிமையைக் குறித்தும் எழுதுவதற்கு, அவன் மனிதனால் புரிந்து கொள்ளத்தக்க வார்த்தைகளிலே எழுதவேண்டியவனாயிருந்தான். ஆனபடியினால், அவன் தான் பார்த்தவற்றை சூசகமான மொழியிலும், அவற்றை இங்கே பூமியிலுள்ள பொருட்களான பொன் மற்றும் விலையுயர்ந்த கற்களோடு ஒப்பிட்டும் அதிகமாக வர்ணித்தார். இவை உண்மையாகவே வர்ணனைக்கும் அப்பாற்பட்டவிதத்தில் மிக அழகுள்ளதாகவும் அற்புதமானதாகவும் இருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகம் எதைப்போலுள்ளது என வாசித்தபிறகு, ஒருவன் தன் மனதில் அழுத்தப்பட்டு அங்கே போக விருப்பம் கொண்டிருந்தால், இன்னும் ஒரு பகுதி சொல்லப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

பரலோகம் ஆயத்தமாக்கப்பட்ட ஜனங்களுக்கென்று ஆயத்தமாக்கபட்ட இடமாயிருக்கிறதென்று சிலர் சொல்லியிருக்கின்றனர். இது தேவனும் அவருடைய ஜனங்களும் என்றென்றும் வாசஞ்செய்யப்போகின்ற இடமாயிருக்கிறது. ஆனபடியினால் மனிதன் இவ்வாழ்வை விட்டு பிரியும்போது உண்மையாகவே அவன் மரிப்பதில்லை. அவன் மாம்சத்தில் மரிக்கிறான், ஆனால் அவனுடைய ஆத்துமா நித்தியநித்தியமாக வாசம்செய்யும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் ஒரு நாளில் என்றென்றும் மரிக்காமலிருக்கின்ற பரலோக வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். இவையெல்லாம் முழுவதும் அறிந்து கொள்ள வரும்போது, நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. ஆனபடியினால் நாம் விசுவாசத்தினால் இதை ஏற்றுக் கொண்டு இது உண்மையான ஒன்றாக மாறும் நேரம் வரைக்கும் உறுதியுடனிருக்க வேண்டும். தேவன் நம்மை வஞ்சிக்கமாட்டாரென்ற முழுநம்பிக்கையுடையவர் களாயிருக்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக நாம் ஒருபோதும்



கண்டிராததும் அல்லது கற்பனை செய்திராததுமான காரியத்தை நமக்கு அருளுவார்.

நீங்கள் பரலோகம் செல்ல விரும்பமாட்டீர்களா? ஒரு நாளில் தேவனோடு வாழ விரும்பமாட்டீர்களா? வாழ்க்கை இப்படியிருக்குமானால் அது எவ்வளவு கோரமானதாயிருக்கும். அங்கே பல பிரச்சனைகளும், தொந்தரவுகளும், தலைவலிகளும் உள்ளன. அங்கே பலவிதமான வேதனைகளும், வலிகளும், துன்பங்களும் உள்ளன. ஆனால் நாம் இவ்வாழ்விற்கு அப்பாற்பட்ட ஒரு சிறந்த உலகத்தை நோக்கும்போது இந்த உலக வாழ்வை எப்படியும் சமாளிக்கமுடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் நீங்கள் கெட்டுப்போன நிலையிலிருக்கிறீர்கள். மேலும் கல்லறைக்கு அப்பால் நம்பிக்கையில்லாவர்களா யிருக்கிறீர்கள். நீங்கள் இதை உணரும் படிக்கும், இதை சரிசெய்து கொள்ள முயற்சி செய்யும்படிக்கும், உங்களுக்காக நான் ஜெபிக்க விரும்புகிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு ஒரு நாளில் பரலோகத்திற்குச் செல்லும் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளமுடியும் (மத்.16:16). நீங்கள் இதைச் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சிப்பது மட்டுமின்றி, தம்முடைய சபையிலும் உங்களைச் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). நீங்கள் இன்னும் காலத்தையும் தருணத்தையும் பெற்றிருக்கையில் இதை நீங்கள் செய்வீர்களென நாங்கள் ஜெபிக்கிறோம்.

- இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ள "World Evangelism Bible School" க்காக...
- 11-ம்தேதி சென்னையில் நடைபெற்ற சுவிசேஷகூட்டத்தில் கீழ்ப்படிந்த சகோதரிக்காக...
- சகோ. தானியேல் மொழியாக்கத்தில் வெளி வந்த சகோ.ஜெரி பேட்ஸ் புத்தகத்திற்காக...
- இம்மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் மக்கள் சரியான நபரை தேர்ந்தெடுக்க...
- தேவன் மழையை கட்டளையிட, தண்ணீர் தட்டுப்பாடு நீங்க...

**ஜெபியுங்கள்**



**வேத அறிவுப்போட்டி: 163 -ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. கொரிந்து சபை | - 2கொரி.7:16 |
| 2. தீர்க்கதரிசி | - 2நாளா.28:9 |
| 3. யூத | - கலா.1:13 |
| 4. எஸ்றா | - எஸ்றா 10:1 |
| 5. ஒரே | - எபே.4:5 |
| 6. நெகேமியா | - நெகே.13:3 |
| 7. தீமோத்தேயுவை | - பிலி.2:20 |
| 8. ஆத்தாகு | - எஸ்தர் 4:8 |
| 9. பவுல் | - கொலோ.2:5 |
| 10. யோபு | - யோபு 19:29 |

**வேத அறிவுப்போட்டி: 163-ல் வெற்றி பெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. T. ராஜாத்தி | - கோம்பை |
| 2. J. ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| 3. S. சரோஜினிமுத்து | - தாராபுரம் |
| 4. Sis. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 5. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 6. Ira. எதிராசன் | - சங்ககிரி |
| 7. Mrs. கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் | - சென்னை |
| 8. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 9. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 10. R. எமிமாள் ரவிக்குமார் | - பாளையங்கோட்டை |
| 11. Mrs. கிப்ட் இளையராஜா | - ஒட்டநத்தம் |
| 12. S.A. சாமுவேல் | - வேலூர் |
| 13. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 14. D. சாந்தா தேவி | - தேனி |
| 15. D. டேவிட் | - சென்னை |
| 16. S. லதா | - தேனி |